2015 செப்டம்பர் 15]

அரியலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், திருமானூர் பகுதியில் 18 அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்ற காரணத்தினால் திருமானூர் பகுதியில் அரசின் சார்பாக நவீன அரிசி ஆலையைத் தொடங்குகின்ற உத்தேசம் தற்போது இல்லை. எதிர்காலத்தில் வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுமேயானால், அந்தப் பகுதியில் ஆய்வு செய்து. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

258—

மின் வாரிய அலுவலகம்

***53560 திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்தில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்திற்கான மின் வாரியப் பிரிவு அலுவலகம் 3 கி.மீ. தொலைவில் உள்ள பேராம்பட்டில் உள்ளது. பேராம்பட்டு பிரிவு அலுவலகத்தின்கீழ் 123 மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. வாரிய விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருந்தால் மட்டுமே பிரிவு அலுவலகம் தனியாக அமைக்க முடியும். எனவே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்தில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, காரப்பட்டு கிராமத்தில் மின் பிரிவு அலுவலகத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

எக்கூர் ஊராட்சி, மவுனூர்பட்டி ஊராட்சி, கீழ்மத்தூர் ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிகள் ஊத்தங்கரையில் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் அனைவரும் ஆண்டியூரில்தான் மின் கட்டணங்களைச் செலுத்தி வருகின்றார்கள். எதிர்காலத்திலாவது, அவர்களுக்குத் தனியாக மின் வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் வாரிய விதிகளின்படி, குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருந்தால் மட்டும்தான் அந்தப் பகுதியில் ஒரு பிரிவு அலுவலகம் அமைக்க முடியும். பேராம்பட்டில் ஒரு பிரிவு அலுவலகம் ஏற்கெனவே இயங்கி வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டியூர் கிராமத்தில் ஒரு மின் வாரியப் பிரிவு அலுவலகம் வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார். பேராம்பட்டு மின் வாரியப் பிரிவு அலுவலகத்தை உள்ளடக்கிய பகுதிதான் ஆண்டியூர் ஊராட்சி ஒன்றியம். பேராம்பட்டு மின் வாரியப் பிரிவு அலுவலகத்திலேயே 123 மின்மாற்றிகள்தான் இருக்கின்றன. விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். 3 மின்மாற்றிகள் குறைவாக, அதாவது 123 மின்மாற்றிகள் தான் பேராம்பட்டில் உள்ளன. இந்நிலையில் அதனை இரண்டாகப் பிரித்து ஆண்டியூர் கிராமத்தில் ஒரு மின்

வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு விதிகள் இடம் தரவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராம்பட்டு மின் வாரியப் பிரிவு அலுவலகமே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். வாரிய விதிகளுக்கேற்ப எதிர்காலத்தில் அங்கு மின்மாற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், தேவை ஏற்படின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

259—

மரக் கன்றுகள் நடுதல்

***52332—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியிலுள்ள நெடுஞ்சாலை ஓரங்களில் மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

புவனகிரி தொகுதியிலுள்ள நெடுஞ்சாலையின் ஓரங்களில் மரக் கன்றுகள் நடப்பட வேண்டிய சாலைப் பகுதியில் மரக் கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.